Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், அக்டோபர் 01, 2026 | இதழ் 171

## த.வெ.க. வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம். தாராபுரத்தில் விஜய்; மக்கள் குவிந்தனர். கோவையில் இருந்து தாராபுரத்துக்கு வேனில் சென்றார். வழிநெடுகிலும் எழுச்சி; உற்சாகம்



சென்னை, 01 அக்டோபர் 2026: த.வெ.க. வேட்பாளர் சத்யபாமாவை ஆதரித்து பிரச்சாரம் செய்ய சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் முதலமைச்சர் விஜய் மதியம் 12.30 மணி அளவில் கோவை விமான நிலையம் வந்தார்.

அங்கு அவருக்கு தொண்டர்களும், ரசிகர்களும் பெருந்திரளாக கூடி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அங்கிருந்து வேன் மூலம் தாராபுரம் புறப்பட்டுச் சென்றார். கோவையில் இருந்து தாராபுரத்துக்கு சுமார் 75 கி.மீ. தூரம் ஆகும். சாலை மார்க்கமாக அவர் சென்ற போது சாலையின் இரு பக்கமும் திரளான மக்களும் தொண்டர்களும் கை அசைத்து துள்ளி குதித்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். எங்கும் ஒரே உற்சாகம், எழுச்சி காணப்பட்டது.

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் (அக்டோபர்) 6ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் த.வெ.க., அண்ணா தி.மு.க., தி.மு.க, கம்யூனிஸ்ட் கட்சிகள், நாம் தமிழர் கட்சி என 5 முனை போட்டி நிலவுகிறது.

த.வெ.க. சார்பில் மதுராந்தகத்தில் மரகதம் குமரவேலுவும், தாராபுரத்தில் சத்யபாமாவும் போட்டியிடுகிறார்கள்.

ஏற்கனவேமதுராந்கதம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலுவை ஆதரித்து முதல்வர் விஜய் கடந்த 25ந் தேதி பிரச்சாரம் செய்தார். அங்கு அவருக்கு மக்கள் எழுச்சி வரவேற்பு அளித்தார்கள்.

இதனை அடுத்து இன்று தாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமாவை ஆதரித்து முதல்வர் விஜய் பிரச்சாரம் செய்கிறார்.

தேர்தலுக்கு இன்னும் 6 நாட்களே இருப்பதால், பிரதான கட்சி வேட்பாளர்களின் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவுக்கு ஆதரவு கேட்டு அந்த கட்சியின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான விஜய் இன்று தாராபுரத்தில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பேச உள்ளார்.

54 ஏக்கரில்...

இதற்காக தாராபுரத்தில் இருந்து உடுமலை செல்லும் சாலையில் கொண்டரசம்பாளையம் மாருதி நகரில் 54 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக மைதானம் தயார் செய்யப்பட்டு பணி நிறைவடைந்துள்ளது.

இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு முதலமைச்சர் விஜய் ஆதரவு திரட்டுகிறார். இதற்காக முதலமைச்சர் நின்று பேச இருக்கும் பேருந்து, மேடை அமையும் இடத்தின் அருகே நிறுத்தப் படுகிறது.

பொதுக்கூட்ட அரங்கில் முதலில் அமைச்சர்களும், முக்கிய நிர்வாகிகளும் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து பொது மக்கள், தொண்டர்கள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. பொதுக் கூட்ட பந்தலில் 10-க்கும் மேற்பட்ட பிரம்மாண்ட எல்.இ.டி. திரைகள் வைக்கப்பட்டு நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

மலர் தூவி வரவேற்பு

முதலமைச்சர் வேனில் வந்தபோது மலர்களை தூவி வாழ்த்து கோஷம் எழுப்பி வரவேற்றனர். கட்சி கொடிகளை காட்டியும், விசில் ஊதியும் உற்சாகமாக வரவேற்றனர். திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்டங்களில் இருந்தும் தொண்டர்கள், ரசிகர்கள் குவிந்தனர்.

திறந்த வேனில் நின்றபடி கை கூப்பியும், கை அசைத்தும் சாலையின் இருபக்கமும் திரண்டிருந்த மக்களின் வரவேற்பை பெற்றார். கொளுதம் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூடியிருந்தனர்.

கட்சி கொடி நிறத்தில் ராட்சத மாலையும் அவருக்கு அளித்தனர். சாலையின் ஓரம் நின்றவர்களை எழுச்சியுடனும், உற்சாகத்துடனும் கை அசைத்தபோது எங்கு பார்த்தாலும் ஒரே கைகளாக காட்சி அளித்தன.

## முதலமைச்சர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் செம்மலை



சென்னை, 01 அக்டோபர் 2026: அதிமுகவில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர் செம்மலை, தவெகவில் இணைந்தார். கட்சித் துண்டை அணிவித்து முதலமைச்சர் விஜய் வரவேற்றார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்துக்காக வருகை தந்த முதல்வர் விஜய் முன்னிலையில், தவெக-வில் முன்னாள் அமைச்சர் செம்மலையை இணைத்துக் கொண்டார். பிரசார திடலுக்கு வந்த முதல்வர் விஜய்யை செம்மலை வரவேற்றார். இதனைத் தொடர்ந்து, செம்மலைக்கு விஜய் தவெக கட்சித் துண்டை அணிவித்தார்.

செம்மலை 1980ம் ஆண்டு தாரமங்கலம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 1984, 2001, 2016ம் ஆண்டுகளில் அதிமுக சார்பில் சட்டசபைக்கும், 2009ம் ஆண்டு சேலம் லோக்சபா தொகுதியில் இருந்து எம்.பி.,யாகவும் தேர்வு செய்யப்பட்டவர். கடந்த மே மாதம் உட்கட்சி பூசலால் திண்டாடி வரும் நிலையில், அதிமுகவில் இருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சர் செம்மலை அறிவித்தார். அதன் பிறகு அரசியலில் இருந்து செம்மலை ஒதுங்கி இருந்தார்.

இந்த நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர் செம்மலை இன்று தவெகவில் இணைந்துள்ளார். தாராபுரம் சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தவெக வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல்வர் விஜய் பிரசாரம் மேற்கொண்டார்.

## தேர்தல் ஆணையத்தை நோக்கி அக்.6 எதிர்க்கட்சிகள் பேரணி: மல்லிகார்ஜுன கார்கே அறிவிப்பு




சென்னை 01, அக்டோபர் 2026: இந்தியத் தேர்தல் ஆணையத்தை நோக்கி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அக்டோபர் 6 ஆம் தேதி பேரணியாகச் செல்லவுள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) விவகாரத்தில், தேர்தல் ஆணையத்தின் மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் 14 முறை எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனிப்பட்டமுறையில் முடிவெடுத்ததாக புகார் எழுந்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து ஞானேஷ் குமார் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவது குறித்து இந்தியா கூட்டணிக் கட்சிகள் இன்று ஆலோசனை நடத்தின. இதனைத் தொடர்ந்து, இந்தியா கூட்டணித் தலைவர்கள் கூட்டாகச் செய்தியாளர்களிடம் பேசியுள்ளனர். அப்போது மல்லிகார்ஜுன கார்கே பேசியபோது, தேர்தல் ஆணையத்தின் மூன்று ஆணையர்களும் வெறும் பகடைக்காய்களாகவே உள்ளனர். அமித் ஷாவும் மோடியும் அவர்களைக் கைப்பாவைகளைப் போல ஆட்டிவைக்கின்றனர். எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டுப் போராடுவது குறித்து அனைத்துக் கட்சிகளும் விவாதித்தன.

இந்தியா கூட்டணிக் கட்சிகள் சார்பில் ஜனநாயகம் காப்போம் என்ற தலைப்பில் நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்படும். வருகின்ற அக்டோபர் 2 முதல் அக்டோபர் 8 வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் போராட்டங்களை நடத்துவோம். மேலும் அக்டோபர் 6 அன்று, அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் தேர்தல் ஆணையத்தை நோக்கிப் பேரணியாகச் சென்று முற்றுகை போராட்டம் நடத்தவுள்ளோம்.

அக்டோபர் இரண்டாம் வாரத்தில் குடியரசுத் தலைவரைச் சந்திக்க நேரம் கோருவோம். அவரிடம் தேர்தல் ஆணையம் எவ்வாறு கையகப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவோம்.

அக்டோபர் - நவம்பர் மாதங்களில் ஐந்து பெரிய பேரணிகள் நடத்தப்படும். அதற்கான இடங்களும் தேதிகளும் விரைவில் இறுதி செய்யப்படும். 'வாக்குத் திருட்டு' குறித்து ராகுல் காந்தியும் மமதா பானர்ஜியும் கூறிவந்ததை இப்போது அனைவரும் ஏற்றுக் கொள்வதால், நவம்பர் 1 அன்று தில்லியில் ஒரு பெரிய பேரணி ஏற்பாடு செய்யப்படும் என்று செய்தியாளர் சந்திப்பில் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

## பாதுகாப்புக் கணக்குகள் துறையின் 279-வது ஆண்டு தினம் கொண்டாட்டம்

சென்னை 01, அக்டோபர் 2026: பாதுகாப்பு கணக்குகள் துறை 279-வது ஆண்டு தினத்தை நாளை (1.10.2026) கொண்டாடுகிறது. புதுதில்லியில் உள்ள டிஆர்டிஓ வளாகத்தில் டாக்டர் டி எஸ் கோத்தாரி அரங்கத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார். இந் நிகழ்ச்சியில் பாதுகாப்பு கணக்குகள் துறையில் பல்வேறு தொழில்நுட்ப முன்முயற்சிகளை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தொடங்கி வைக்கிறார்.

இதில், இந்திய ராணுவத்தின் நிதிசார் தகவல் அமைப்புடன் இத்துறைக்கான இணையதளத்துடன் ஒருங்கிணைத்தல், பாதுகாப்பு அமைச்சகத்தின் மேம்படுத்தப்பட்ட தேசிய தொகுப்பு அமைப்பு, பாதுகாப்பு அமைச்சகத்தின் கருவூல ஒற்றைக் கணக்கு அமைப்பின் மூலம் பணப்பரிவர்த்தனைக்கான நடைமுறையை அறிமுகப்படுத்தும் பிரிசம் இணையதளம் ஆகியவை அடங்கும்.

மேலும் பாதுகாப்புச் செலவினங்கள் குறித்த விரிவான புள்ளி விவரக் கையேடு, இத்துறையின் இந்தி மொழி இதழான பாரதி, சந்தை முன்னறிவு அறிக்கை உள்ளிட்ட பல்வேறு வெளியீடுகளையும் அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிடுகிறார்.



## இந்தியாவில் தனியாக வசிப்பவர்களில் 35% பேர் தனிமையாக உணர்கிறார்கள், அதே நேரத்தில் 70% பேர் புதிய சமூகத் தொடர்புகளை உருவாக்க தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனர்: மேட்ச் குரூப்-இப்சோஸ் கணக்கெடுப்பு

சென்னை 01, அக்டோபர் 2026: ஆசியா முழுவதும், நவீன வாழ்க்கை முறை, தனியாக வாழும் இளைஞர்கள் தாங்கள் விரும்பும் அர்த்தமுள்ள உறவுகளைக் கட்டியெழுப்புவதை கடினமாக்கி வருகிறது. இந்தியாவில், இணைவதற்கான வாய்ப்புகள் இல்லாதது சவால் அல்ல; மாறாக, பெருகிவரும் பரபரப்பான மற்றும் டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்ட உலகில், அர்த்தமுள்ளதாக உணரும் உறவுகளைக் கண்டறிவதே சவாலாக உள்ளது. இளம் இந்தியர்கள் தொடர்ந்து சமூக மற்றும் காதல் உறவுகளைத் தேடுகிறார்கள், ஆனாலும், வேலை அழுத்தங்கள், சோர்வு மற்றும் ஆன்லைன் உரையாடலுக்கும் நிஜ வாழ்க்கை உறவுக்கும் இடையிலான இடைவெளி ஆகியவை உண்மையான இணைப்பை உணர்வதை கடினமாக்குகின்றன.

மனித இணைப்புகளின் இந்த மாறிவரும் நிலப்பரப்பை நன்கு புரிந்துகொள்வதற்காக, இந்தியாவில் உள்ள திருமணமாகாத இளம் வயதினர் தனிமை, சமூக இணைப்பு, உறவுகள் மற்றும் டேட்டிங் ஆகியவற்றை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்ய, மேட்ச் குரூப் நிறுவனம் இப்சோஸ் நிறுவனத்தை நியமித்தது.




இந்த ஆய்வின் முடிவுகள் ஒரு தெளிவான இணைப்பு முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றன: இளம் இந்தியர்கள் தீவிரமாக இணைப்புகளைத் தேடுகிறார்கள், ஆனால் மக்களால் சூழப்பட்டிருப்பதும், டிஜிட்டல் முறையில் இணைந்திருப்பதும் எப்போதும் அவர்கள் தனிமையில் இல்லை என்ற உணர்வைத் தருவதில்லை. பலருக்கு, வளர்ந்து வரும் தேவை என்பது மக்களைச் சந்திப்பதற்கான அதிக வழிகளுக்கானது மட்டுமல்ல, மாறாக குறைவான, ஆழமான மற்றும் அதிக அர்த்தமுள்ள உறவுகளுக்கானதுமாகும்.

மேட்ச் குரூப் மனித இணைப்பு கணக்கெடுப்பில், திருமணமாகாத இந்தியர்களில் 35% பேர் அடிக்கடி அல்லது எப்போதும் தனிமையாக உணர்வதாகவும், அதே சமயம் 70% பேர் புதிய சமூகத் தொடர்புகளை உருவாக்கத் தீவிரமாக முயற்சிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், 75% பேர் வாரத்திற்கு ஒரு முறைக்கு மேல் நேரில் சந்தித்துப் பழகுகின்றனர். மற்றவர்களுடன் இணைவதற்கான விருப்பமின்மை அல்லது வாய்ப்பின்மையைக் காட்டிலும், நவீன வாழ்க்கையின் அழுத்தங்களுடனேயே தனிமை பெருகிய முறையில் தொடர்புடையதாக உள்ளது என்று இந்தக் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் தனியாக வசிப்பவர்களில் 64% பேர், தங்களின் சமூக வாழ்க்கையை விட வேலை அல்லது படிப்புக்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறுகின்றனர். அதே சமயம், 55% பேர் தங்களின் அன்றாடப் பணிகளுக்குப் பிறகு மிகவும் சோர்வடைந்து விட்டதால், சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடிவதில்லை என்று கூறுகின்றனர். மேலும், பாதிக்கும் மேற்பட்டோர் (58%), இணையத்தில் மக்களுடன் இணைந்திருப்பதாகவும், ஆனால் நிஜ வாழ்க்கையில் தனிமையாக உணர்வதாகவும் கூறுகின்றனர். இது, டிஜிட்டல் முறையில் இணைந்திருப்பதற்கும் அர்த்தமுள்ள மனிதத் தொடர்பை அனுபவிப்பதற்கும் இடையிலான இடைவெளியை எடுத்துக் காட்டுகிறது.

இளம் இந்தியர்கள் குறைவான, ஆழமான உறவுகளைத் தேடுகிறார்கள்.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், பிறருடன் இணைவதற்கான விருப்பம் வலுவாகவே உள்ளது. திருமணமாகாத இந்தியர்களில் 72% பேர், குறைவான ஆனால் ஆழமான உறவுகளையே விரும்புவதாகக் கூறுகின்றனர். அதே சமயம், 70% பேர் புதிய சமூக உறவுகளை உருவாக்கத் தீவிரமாக முயன்று வருகின்றனர். உறவுகளிலிருந்து விலகுவதற்குப் பதிலாக, இளம் இந்தியர்கள் தாங்கள் உருவாக்க விரும்பும் உறவுகள் குறித்து அதிக கவனத்துடன் செயல்படுவதாக இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

## பாமக இல்லையென்றால் 47 தொகுதிகளில் வென்றிருக்க முடியாது எடப்பாடி பழனிசாமி மகனுடன் சேர்ந்து அதிமுக சொத்துகளை அபகரிக்க முயற்சி: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பரபரப்பு குற்றச்சாட்டு



சென்னை 01, அக்டோபர் 2026: கோவை விமான நிலையத்தில் நேற்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நிருபர்களிடம் கூறியதாவது: எடப்பாடி பழனிசாமி சமீப காலமாக முதல்வர் மீது தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். கடந்த 2016ம் ஆண்டு 41 சதவீத ஓட்டுகளை பெற்று வெற்றிபெற்ற கட்சி இன்று 10 சதவீதம் ஓட்டாக இருக்கிறது. ஓபிஎஸ், வேலுமணி, தங்கமணி, செங்கோட்டையன் உள்ளிட்டோர் எடப்பாடி பழனிசாமியிடமிருந்து விலகி இருக்கிறார்கள்.

2026 தேர்தலில் கொங்கு மண்டலத்தில் 50 தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக 15 தொகுதிகள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. சேலத்தில் 7 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர். கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இல்லை என்றால் அதிமுகவால் 47 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க முடியாது. பாமக இல்லையென்றால், எடப்பாடி தொகுதியிலேயே அதிமுக வெற்றி பெற்றிருக்க முடியாது. ஜெயலலிதா விசுவாசிகள் வெளியே சென்றுவிட்டதால், இன்று அதிமுகவில் இருப்பது இரண்டே பேர்தான். ஒன்று எடப்பாடி பழனிசாமி. மற்றொன்று அவரது மகன் மிதுன்.

மிதுனுக்கு இந்த கட்சியை அடமானம் வைத்து விட்டார், எடப்பாடி பழனிசாமி. எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் அதிமுகவில் பெரும் சொத்து உருவாக்கி வைத்தனர். அதிமுக டிரஸ்டில் பல ஆயிரம் கோடிக்கணக்கான சொத்து, பணம் இருக்கிறது. இதனை அபகரிக்க மகன் மிதுனை கொண்டுவந்துள்ளார், எடப்பாடி பழனிசாமி. மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலுக்கு முன்பே வேலுமணி, தங்கமணி ஒதுக்கப்பட்டு விட்டனர்.

அதிமுக என்கிற கட்சியை மறைமுகமாக வழிநடத்துவது மிதுன். அவர்தான் வேட்பாளரை தேர்வுசெய்தார். எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தையும் மிதுன் தான் முடிவு செய்கிறார். அன்றைய காலக்கட்டத்தில் எடப்பாடி பழனிசாமியை பொதுச்செயலாளராக தேர்வு செய்ய சசிகலாவையே வெளியே அனுப்பினர். இதற்கு வேலுமணி, தங்கமணி, சண்முகம், விஜயபாஸ்கர் ஆகியோர் கடினமாக வேலை செய்தனர். ஆனால், சீட்டில் உட்கார்ந்தவுடன் அவர்களையும் தூக்கி வீசிவிட்டார், தென் மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக அதிமுக வலுவிழந்து விட்டது. இவ்வாறு அமைச்சர் ஆதவ் கூறினார்.

## பாஜக-விற்கு வாக்களித்தால் போதைப்பொருள் இல்லா மாநிலமாக 2029 இறுதிக்குள் பஞ்சாப்-ஐ மாற்றுவோம்..!

சென்னை 01, அக்டோபர் 2026: பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பஞ்சாப் மாநிலத்தை போதைப்பொருள் அற்ற மாநிலமாக மாற்றுவது என்ற ஒரே ஒரு முக்கிய நோக்கத்தை முன்னிறுத்தியே வரவிருக்கும் தேர்தலில் பாஜக போட்டியிடவுள்ளதாக கூறினார்.

பஞ்சாப் மக்கள் பாஜகவை ஆதரித்து 'தாமரை' சின்னத்திற்கு வாக்களித்தால், 2029-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் மனைலத்தை போதைப் பொருள் பிடியிலிருந்து முழுமையாக விடுவிப்போம் என்று உறுதி கூறினார். பாஜக-வால் மட்டுமே பஞ்சாப் மாநிலத்தை போதைப் பொருட்களிலிருந்து விடுவிக்க முடியும். பாஜக இதை ஏற்கனவே நிரூபித்துள்ளது. போதைப் பொருள் இல்லா இந்தியாவுக்கான நாடு தழுவிய பிரச்சாரத்தை நாங்கள் தான் தொடங்கினோம். 2004 முதல் 2014 வரை ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு, அந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் 26 லட்சம் கிலோ போதைப் பொருட்களை மட்டுமே பறிமுதல் செய்தது.

ஆனால் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மோடி அரசு 2014 முதல் 2024 வரையிலான காலத்தில், 1.2 கோடி கிலோ போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்தது. காங்கிரஸ் கட்சி 40,000 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்திருந்தது என்றால் நாங்களோ 1,90,000 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை 10 ஆண்டுகளில் பறிமுதல் செய்தோம் என குறிப்பிட்டார். நாங்கள் அளித்த வாக்குறுதிகளை எப்போதும் நிறைவேற்றியுள்ளோம். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், காஷ்மீரை பயங்கரவாதத்திலிருந்து பாஜக அரசு மீட்டது, 50 ஆண்டுகால நக்சல் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தது மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தில் கிளர்ச்சிகளை ஒழித்தது. இப்போது போதைப்பொருள் இல்லாத பஞ்சாபை உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அமித் ஷா பேசினார்.

## நவீன போர்முறை, தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப பாதுகாப்புத்துறை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம்: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்

சென்னை 01, அக்டோபர் 2026: நவீன காலப் போர்முறை, தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப பாதுகாப்புத்துறையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் கடற்படை தளபதிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் பாதுகாப்பில் இந்திய கடற்படையின் பங்களிப்பு அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டினார். கடல்சார் பாதுகாப்பில் இந்தியாவின் உத்திசார் பொறுப்புகள் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் கண்காணிப்பு, அமைதியைப் பராமரிப்பதில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து பேசிய அவர், பாதுகாப்பான எரிசக்தி விநியோக நடவடிக்கைகளை கடற்படை திறம்பட மேற்கொண்டதை அமைச்சர் சுட்டிக்காட்டினார். பாதுகாப்பான கடல்பகுதிகள், வளர்ச்சி கண்டு வரும் நாட்டிற்கு இன்றியமையாத ஒன்று என்று அவர் எடுத்துரைத்தார்.

மாறிவரும் போர்முறைகள், நவீனத் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு முப்படைகள் இடையே ஒருங்கிணைப்பு, கூட்டுச் செயல்பாடுகள் அவசியம் என்று திரு



ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

பாதுகாப்புப் படையின் செயல்பாட்டுத் திறன், கடல்சார் பாதுகாப்பு, எதிர்காலத் திறன் மேம்பாடு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

## அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புடன் பிரதமர் தொலைபேசி வாயிலாகப் பேச்சு

சென்னை 01, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் ட்ரம்ப் உடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார். வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, முக்கியத் தொழில்நுட்பங்கள், பரஸ்பர விருப்பம் உள்ள இதர துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

இந்திய-அமெரிக்க விரிவான உலகளாவிய உத்திசார் கூட்டாண்மையை முன்னெடுத்துச் செல்வதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் மீண்டும் வலியுறுத்தியதுடன், இரு நாட்டு மக்களின் நலனுக்காக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இணைந்துப் பணியாற்றவும் இசைவு தெரிவித்தனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச நிகழ்வுகள் குறித்துக் கருத்துகளைப் பரிமாறிக் கொண்ட தலைவர்கள், உலக அமைதியையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்தும் ஆலோசித்தனர்.

எதிர்காலத்தில் முக்கிய நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து ஆலோசிக்க இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil South Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# வெள்ளை மாளிகை சுவாரசியம்..! சுந்தர் பிச்சையை ‘Monster’ என்று ஊடகங்களிடம் அடையாளம் காட்டிய டிரம்ப்



சென்னை 01, அக்டோபர் 2026: கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான சுந்தர் பிச்சையை, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் "ஹீ ஈஸ் எ மான்ஸ்டர்" (Monster) அதாவது அசுர சாதனையாளர் என்று குறிப்பிட்ட சம்பவம் கவனத்தை ஈர்த்துள்ளது.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது இந்த சுவாரசியமான சம்பவம் நிகழ்ந்தது. வெள்ளை மாளிகையின் வாகனப் பாதையில் செய்தியாளர்களிடம் கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சையை இவர் ஒரு பெரிதாக அறியப்படாத மான்ஸ்டர் என்றும், அவர் ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும் டிரம்ப் குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகையின் நுழைவுப் பாதையில் செய்தியாளர்களிடம் பேசுமாறு சுந்தர் பிச்சையை டிரம்ப் அழைத்த போது டிரம்ப் ஊடகங்களை நோக்கி, "இவர் ஒரு மான்ஸ்டர் (இமாலய சாதனையாளர்), ஆனால் இவரை யாருக்கும் (பொது வெளியில்) தெரியாது. அவ்வளவு அருமையான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்! இவ்வளவு பெரிய சக்தியாக இருந்தும், தினமும் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேச வேண்டிய அவசியம் இல்லாததால், சுந்தர் பிச்சையைப் போன்ற தொழில்நுட்பத் துறைத் தலைவர்கள் மிகச் சிறந்த வாழ்க்கையை வாழ்கின்றனர் என அமெரிக்க அதிபர் குறிப்பிட்டார்.

பின்னர் ஊடகத்தினரிடம் பேசிய டிரம்ப் இவரது பெயரை நினைவில் கொள்ளுங்கள். "இவரை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் 'சுந்தர்' என்பதுதான். சுந்தர் என்பதுதான் அவரது பெயர்," என்று கூறினார். அரசியல் வாதிகளைப் போலப் பொதுமக்களிடம் பெரிய விளம்பரம் இல்லாமல், அதே சமயம் தொழில்துறையில் பிரம்மாண்ட ஆதிக்கம் செலுத்துபவர் என்ற அர்த்தத்தில் டிரம்ப் சுந்தர் பிச்சை ஒரு "மான்ஸ்டர்" என்ற வார்த்தையை பயன்படுத்தி இருக்கிறார்.

# தமிழ்நாட்டில் இ-கேஒய்சி மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொருட்கள் வழங்குவது முடக்கப்படமாட்டாது: தமிழ்நாடு அரசு அறிவிப்பு



சென்னை 01, அக்டோபர் 2026: தமிழ்நாட்டில் இ-கேஒய்சி மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொருட்கள் வழங்குவது முடக்கப்படமாட்டாது என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; எந்தவொரு குடும்ப அட்டைதாரருக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதை நிறுத்தவோ / தடை செய்யவோ கூடாது என அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள் /உதவி ஆணையர்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. ஒன்றிய அரசு, 6 மாதங்களுக்கு மேல் நியாய விலைக்கடைகளில் பொருட்கள் வாங்காத முன்னுரிமை (பிஹெச்ஹெச்) குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா (ஏஏஒய்) குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதை அக்டோபர் 1 2026 முதல் தற்காலிகமாக தடை செய்து உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முன்னுரிமை குடும்ப அட்டை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களின் இ-கேஒய்சி சதவீதம் 96.69% ஆகும். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 10.05.2026 முதல் 02.08.2026, 08.08.2026, 09.08.2026, 29.08.2026, 19.09.2026 மற்றும் 26.09.2026 ஆகிய தேதிகளில் இ-கேஒய்சி சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்கள் மூலமாக, ஜூலை மாதத்தில் 95.44 சதவீதமாக இருந்த இ-கேஒய்சி சரிபார்ப்பு, செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதி அன்று 96.69 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த சிறப்பு முகாம்களின் மூலமாக 4,49,663 முன்னுரிமை (பிஹெச்ஹெச்) மற்றும் ஏஏஒய் திட்டப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

எனினும் இ-கேஒய்சி பணியினை மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள். நியாய விலைக்கடைகளுக்கு பொருட்கள் வாங்க செல்லும்போது, கைவிரல் ரேகை /கண்கருவிழி சரிபார்ப்பின் மூலம் தங்களது இ-கேஒய்சி தகவல்களை விரைந்து பதிவேற்றம் செய்யுமாறு தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# குஜராத் மாநிலம் ஆனந்தில் நேரிட்ட விபத்தில் உயிரிழந்தோருக்குப் பிரதமர் இரங்கல்




சென்னை 01, அக்டோபர் 2026: குஜராத் மாநிலம் ஆனந்த் பகுதியில் நேரிட்ட விபத்தில் உயிரிழந்தோருக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர், காயமடைந்த வர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

“குஜராத்தின் ஆனந்த் பகுதியில் நேரிட்ட விபத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பது மிகுந்த மன வேதனை அளிப்பதாக உள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்."

# மானிய விலை காஸ் சிலிண்டர் பெற பயோமெட்ரிக் கட்டாயம்- இன்றுடன் காலக்கெடு நிறைவு; 90 சதவீதம் பேர் முடித்தனர்




சென்னை 01, அக்டோபர் 2026: மானிய விலையில் சமையல் காஸ் சிலிண்டர் பெறுவதற்கான ஆதார் அடிப்படையிலான மின்னணு வாடிக்கையாளர் சரிபார்ப்பை (இ-கே.ஒய்.சி.) இதுவரை முடிக்காதவர்கள், இன்றைக்குள் அதை நிறைவு செய்ய வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. நாளை முதல் இந்த சரிபார்ப்பு நடைமுறை கட்டாயமாகிறது. இதை முடிக்காதவர்கள் அடுத்தடுத்து காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்வதில் சிக்கல்களை சந்திக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சமையல் காஸ் இணைப்புகளில் ஏற்படும் முறைகேடுகள், போலி இணைப்புகள் மற்றும் ஒரே நபரின் பெயரில் உள்ள பல்வேறு இணைப்புகளை கட்டுப்படுத்தவும், அரசு வழங்கும் மானியம் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யவும் இ-கே.ஒய்.சி. சரிபார்ப்பு நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 90 சதவீத கியாஸ் வாடிக்கையாளர்கள் இ-கே.ஒய்.சி. சரிபார்ப்பை முடித்துள்ளதாகவும், மீதமுள்ள 10 சதவீதம் பேர் இன்னும் முடிக்காமல் இருப்பதாகவும் எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது அத்தியாவசிய நடைமுறை என்பதால், விடுபட்ட வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் கால அவகாசம் வழங்குவது குறித்தும் பரிசீலிக்கப்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

ஆன்லைனில் செய்ய முடியாதவர்கள் தங்களது கியாஸ் ஏஜென்சிக்கு நேரில் சென்று சரிபார்ப்பை மேற்கொள்ளலாம். அப்போது ஆதார் அட்டை நகல், கியாஸ் நுகர்வோர் எண் மற்றும் பதிவு செய்யப்பட்ட கைபேசியை எடுத்துச் செல்ல வேண்டும். ஏஜென்சியில் உள்ள பயோமெட்ரிக் கருவி மூலம் சரிபார்ப்பை முடித்துக்கொள்ளலாம்.

# பொருளாதார நெருக்கடியிலும் ராணுவத்திற்கு அதிக முக்கியத்துவம்: ஆயுத இறக்குமதியை அதிகரிக்கும் பாகிஸ்தான்!




சென்னை 01, அக்டோபர் 2026: பாகிஸ்தான் அரசு எல்லையோர பயங்கரவாதங்களுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறி, இந்திய அரசு சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்துள்ளது. சிந்து நதியே பாகிஸ்தானின் முக்கிய நீராதாரமாக உள்ள நிலையில், இந்தியாவின் இந்த நடவடிக்கையால் அந்நாட்டில் கடுமையான நீர் நெருக்கடி ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும், நீர்வளப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான போதிய நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ளவில்லை என்றும், இதன் காரணமாகவே அந்நாட்டில் தற்போதைய நிலை உருவாகியுள்ளதாகவும் சில ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை, நீர்வளத் துறையை வலுப்படுத்துவதைக் காட்டிலும் ராணுவத்திற்கு பாகிஸ்தான் அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில் ராணுவத்தை மேலும் விரிவுபடுத்துவதில் பாகிஸ்தான் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருவதாகவும், இதற்காக சீனா உள்ளிட்ட வெளிநாடுகளை அந்நாடு அதிகளவில் சார்ந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுவரும் நிலையிலும் பாகிஸ்தான் தனது ராணுவத்தை வலுப்படுத்துவதற்காக அதிக அளவில் செலவிட்டு வருகிறது.

2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், வெளிநாடுகளில் இருந்து முக்கிய ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடுகளில் பாகிஸ்தான் 5-வது இடத்தில் இருந்ததாக SIPRI தெரிவித்துள்ளது. இதே கால கட்டத்தில், முந்தைய ஐந்தாண்டு காலத்துடன் ஒப்பிடும்போது பாகிஸ்தானின் ஆயுத இறக்குமதி 66 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

பாகிஸ்தான் இறக்குமதி செய்யும் முக்கிய ஆயுதங்களில் சுமார் 80 சதவீதம் சீனாவிலிருந்து பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவிடமிருந்து விடி-4 ரக போர் டாங்கிகள், கவச வாகனங்கள், எல்ஒய்-80 மற்றும் ஹெச்க்யூ-9பி வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகள், ஜேஎஃப்-17 மற்றும் ஜே-10சி ரக போர் விமானங்கள் உள்ளிட்ட பல்வேறு ராணுவத் தளவாடங்களை பாகிஸ்தான் வாங்கி வருகிறது.

மேலும், சீனாவிடமிருந்து ஹாங்கோர் ரக நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் மேற்கொண்டு வருகிறது. இதுதவிர, போர்க் கப்பல்கள் உள்ளிட்ட கடற்படைத் தளவாடங்களை உருவாக்குவதற்காக துருக்கி உள்ளிட்ட நாடுகளுடனும் பாகிஸ்தான் இணைந்து செயல்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருபுறம் பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடி, கடன் சுமை, நீர்வளப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொண்டுவருகிறது. மறுபுறம், ராணுவத்தை நவீனப்படுத்துவதற்கும் புதிய ஆயுதங்களைப் பெறுவதற்கும் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதனால், நாட்டின் குறைந்து வரும் நிதி வளங்கள் எந்த அளவுக்கு பாதுகாப்புத் துறைக்கும், மற்ற அத்தியாவசியத் துறைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பது குறித்த விவாதமும் எழுந்துள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## அமெரிக்காவின் மிகப்பெரிய எஃகு உற்பத்தி திட்டத்தை பெற்றது எஸ்ஸார் குழுமம்: ரூ.1.7 லட்சம் கோடி முதலீடு



சென்னை 01, அக்டோபர் 2026: அமெரிக்காவில் ரூ.1.70 லட்சம் கோடி மதிப்பிலான பிரம்மாண்டமான எஃகு உற்பத்தி திட்டத்தை இந்தியாவின் எஸ்ஸார் குழுமம் மேற்கொள்ள உள்ளதாக அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். சென்னையில் கடந்த 1969ல் தொடங்கப்பட்ட எஸ்ஸார் குழுமம் எரிசக்தி, உள்கட்டமைப்பு, உலோகங்கள், சுரங்கம், எஃகு உற்பத்தியில் உலகின் முன்னிணி நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது.

இந்நிலையில், அமெரிக்க வரலாற்றிலேயே மிகப்பெரிய எஃகு ஆலை திட்டத்தை எஸ்ஸார் குழுமம் மேற்கொள்ள இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் வெள்ளை மாளிகையில் அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்படி, எஸ்ஸார் குழுமத்தின் அமெரிக்க துணை நிறுவனமான மெசாபி மெட்டாலிக்ஸ் மூலமாக, அயோவா மாகாணத்தில் ரூ.1.43 லட்சம் கோடி செலவில் ஒருங்கிணைந்த எஃகு ஆலை அமைக்கப்படவுள்ளது.

மேலும், மினசோட்டாவில் உள்ள இரும்புத்தாது சுரங்கம் மற்றும் பெல்லட் உற்பத்தி பிரிவிற்காக ஏற்கனவே ரூ.27 ஆயிரம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. மினசோட்டாவில் இரும்புதாது வெட்டி எடுக்கப்பட்டு, அயோவா ஆலையில் எஃகாக உருக்கப்பட்டு, முழுமையாக அமெரிக்காவிலேயே உற்பத்தி செய்யப்பட உள்ளது. இந்த ஆலை முழுமையாகச் செயல்படத் தொடங்கும்போது, ஆண்டுக்கு 1 கோடி டன் எஃகு உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும்.

இத்திட்டம் 2030க்குள் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிரம்ப் நிர்வாகத்தின் 50% வெளிநாட்டு எஃகு வரி விதிப்புக் கொள்கையால்தான் இத்தகைய பெரிய உள்நாட்டு உற்பத்தி முதலீடுகள் அமெரிக்காவிற்குள் வருகின்றன என்று வெள்ளை மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு நிகழ்வில், எஸ்ஸார் குழுமத்தின் நிறுவனர் ரவி ரூயா மற்றும் மெசாபி மெட்டாலிக்ஸ் தலைவர் ரேவந்த் ரூயா ஆகியோர் பங்கேற்றனர்.

## உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா ஜெட் டிரோன் மூலம் தாக்குதல்



சென்னை 01, அக்டோபர் 2026: உக்ரைன் மீது ரஷ்ய ராணுவம் ஏவுகணைகள், ஜெட் டிரோன்களை வீசி சரமாரியாக தாக்குதல் நடத்தியது. உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே 4 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. கடந்த சில நாட்களாக உக்ரைனின் மீது ரஷ்யா தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் கீவ் மற்றும் சி நகரங்களின் மீது இந்த வான்வழி தாக்குதல்கள் நடந்துள்ளன.

இதனால் பல கட்டிடங்கள்,அலுவலகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், தகவல் தொடர்பு மையங்கள் சேத மடைந்துள்ளன. தொடர் தாக்குதல்களால் பொது மக்கள் சிலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கீவ் நகரில் உள்ள தேசிய அறிவியல் அகாடமி கட்டிடம் மீது ரஷ்யா டிரோன் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார், மேலும் மூவர் காயமடைந்தனர் என மேயர் விடாலி கிளிட்ச்கோ தெரிவித்துள்ளார்.

ரஷ்யா, ஜெட் சக்தியுடன் இயங்கும் புதிய டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளை பயன்படுத்தி கீவ் நகரில் குடியிருப்பு, அலுவலகம், கிடங்கு, தரவுத்தள மையங்கள் போன்ற வற்றை தாக்கியது.

புதிய டிரோன்கள் பழைய ஷாஹெத் அல்லது ஜெரான்-2 மாடல்களை விட வேகமாக பறக் கின்றன, தடுக்கும் முயற்சிகளை கடினமாக்குகின்றன.

## மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு தினத்தைக் குறிக்கும் வகையில் நினைவு நாணயம் மற்றும் அஞ்சல் தலையைப் பிரதமர் வெளியிடுகிறார்




சென்னை 01, அக்டோபர் 2026: மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) நூற்றாண்டு தின கொண்டாட்டத்தை யொட்டி, புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நாளை (1.10. 2026) காலை 11:00 மணிக்கு நடைபெறும் விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

1926-ம் ஆண்டு யுபிஎஸ்சி நிறுவப்பட்டு, நூறு ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் கடந்த ஆண்டு அக்டோபர் 1-ம் தேதி தொடங்கிய ஓராண்டுக் கால கொண்டாட்டங்களின் நிறைவாக இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் யுபிஎஸ்சி நூற்றாண்டு நினைவு நாணயம், நினைவு அஞ்சல் தலை, 100 முக்கியத் தீர்ப்புகள் - இந்தியாவில் யுபிஎஸ்சி, பொதுப் பணி ஆணையங்களின் கொள்கைகளை வடிவமைத்தல் என்ற புத்தகத்தையும் வெளியிடுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் இருந்து மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், மத்திய அரசின் உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள், யுபிஎஸ்சி அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

செப்டம்பர் 30, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் யுபிஎஸ்சி நடத்தும் இரண்டு நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இந்த விழா நடைபெறுகிறது.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் முதல் நாளில் நூற்றாண்டு விழா - சிந்தனை அமர்வு நடைபெறுகிறது.

இதில் பிரபல பேச்சாளர்களின் உரைகளும், அதனைத் தொடர்ந்து பல்வேறு தலைப்புகளில் குழு விவாதமும் இடம் பெறும்.

## உயிரைப் பணயம் வைத்து குட்கா கடத்தல்காரர்களை பிடித்த போலீஸ் ஏட்டு வேல்முருகன்: முதலமைச்சர் விஜய் தலைமைச் செயலகத்துக்கு நேரில் அழைத்து பாராட்டு



சென்னை 01, அக்டோபர் 2026: தடை செய்யப்பட்ட குட்காவை கடத்தியவர்களை, உயிரைப் பணயம் வைத்து பிடித்த போலீஸ் ஏட்டு வேல்முருகனை முதலமைச்சர் விஜய் நேரில் அழைத்து பாராட்டினார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த 27ந்தேதி தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவது குறித்த நம்பகமான தகவலின் அடிப்படையில், ஒரு காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 2 காவலர்களைக் கொண்ட குழுவினர் கனியூர் சுங்கச்சாவடி அருகே வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சந்தேகத்திற்குரிய வாகனம் ஒன்றை காவல் துறையினர் தடுத்து நிறுத்த முயன்றபோது, ஓட்டுநர் வாகனத்தை நிறுத்தாமல், காவல் துறையினர் மீது மோதும் வகையில் அதிவேகமாகவும், ஆபத்தான முறையிலும் வாகனத்தைச் செலுத்தி அங்கிருந்து தப்பிக்க முயன்றார். அச்சமயத்தில், தடைசெய்யப்பட்ட பொருட்கள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட அந்த வாகனத்தின் மேற்கூரையின் மீது கோவில் பாளையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணியாற்றிவரும் ம. வேல்முருகன் தாவி ஏறினார். இதற்கிடையில், குழுவின் மற்ற உறுப்பினர்கள் வாகனத்தைப் பின்தொடர்ந்ததுடன், பிற காவல் குழுக்களுக்கும் தகவல் அளித்தனர். அவர் வாகனத்தின் மேற்கூரையில் இருந்தபோதே, குற்றம் சாட்டப்பட்டவர் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்றார். பின்னர், கூடுதல் காவல் குழுக்களால் அந்த வாகனம் வழிமறிக்கப்பட்டு, தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்களைக் கடத்தியதில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இச்சமயத்தில் விளாங்குறிச்சிலிருந்து அவிநாசி வரை சுமார் 40 கி.மீ. தூரத்திற்குத் தனது உயிரைப் பணயம் வைத்து, காரின் மேற்கூரையில் படுத்தபடியே சென்று தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு சென்ற கடத்தல்காரர்களைக் கைதுசெய்யக் காரணமாக இருந்த தலைமைக் காவலர் வேல்முருகனின் துணிச்சலைப் பாராட்டும் வகையில் அவரை தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சர் விஜய் நேரில் அழைத்துப் பாராட்டி, பரிசு வழங்கினார். அப்போது முதலமைச்சர் இது போன்ற பணியின் போது கவனமாகவும், பாதுகாப்பாகவும் செயல்பட வேண்டுமென்று அவருக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வின்போது போலீஸ் டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் உடனிருந்தார்.

## அரசு விழாக்களில் மதச்சார்பின்மை காக்கப்பட வேண்டும்! -தமிழக அரசுக்கு எஸ்டிபிஐ வலியுறுத்தல்



சென்னை 01, அக்டோபர் 2026: அரசு விழாக்களில் மதச்சார்பின்மை காக்கப்பட வேண்டும் என தமிழக அரசுக்கு எஸ்டிபிஐ வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில செயல் தலைவர் அச. உமர் பாரூக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: உலகச் சுற்றுலா தினத்தை முன்னிட்டு ராமேஸ்வரம் தனுஷ்கோடியில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில், பாஜக ஆளும் வடமாநிலங்களில் நடைபெறுவது போல 'ராம் யாத்ரா' என்ற பெயரில், குழந்தைகளுக்குக் காவி உடை அணிவித்து நாட்டியாஞ்சலி நடத்தப்பட்டிருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கிறது.

பன்மைத்துவமும் சமூக நல்லிணக்கமும் ஆழமாக வேரூன்றிய தமிழக மண்ணில், இந்துத்துவ அடையாளங்களை முன்னிறுத்தி அரசு விழாவாக இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. அரசு நிர்வாகமே நேரடியாக இத்தகைய நிகழ்வை முன்னெடுத்திருப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மதச்சார்பின்மைக் கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானது. அனைத்து மதங்களையும் சமமாகப் பாவிப்பதும், அரசு நிர்வாகத்தை மத அடையாளங்களிலிருந்து விலக்கி வைப்பதுமே மக்களாட்சியின் அடிப்படை நெறி. சுற்றுலாத் துறை போன்ற பொது நிர்வாக அமைப்புகள், குறிப்பிட்ட அடையாளத்துடன் கூடிய மதச் சடங்குகளையோ, வழிபாட்டு வடிவங்களையோ அரசு விழாக்களாக மாற்றுவது பன்முகத்தன்மையைச் சிதைக்கும் செயலாகும்.

தமிழகத்தின் நீண்டகால அரசியல் மரபில் மதச்சார்பற்ற மாண்புகள் உறுதியாகப் பேணப்பட்டு வந்த சூழலில், தற்போதைய அரசு இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடுத்திருப்பது ஜனநாயக சக்திகள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, தமிழ்நாடு அரசு மதச்சார்பற்ற கட்டமைப்பைப் பலவீனப்படுத்தாமல், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை விழுமியங்களை உணர்ந்து, எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் அரசு இயந்திரத்தின் மூலம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

